தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041–சித்திரை 10

2010 ஏப்ரல் 23, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு."

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

81—

குளிர்பதனக் கிடங்கு

***101847—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் வேளாண்மை குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் வேளாண்மை குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மானாவாரி கரிசல் நிலத்தில் மிக அதிகமாக முண்டு வற்றல் விளைவது விளாத்திகுளம் தொகுதியில்தான். எங்கள் பகுதியில் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் சரியான அளவில் மழை பெய்தால் விளையும் ஒரே பயிர் முண்டு வற்றல். எங்கள் குறு, சிறு விவசாயிகள் வயிற்றுப் பசியைப் போக்குவதே இந்த முண்டு வற்றல் விளைச்சலில்தான் உள்ளது. அந்த அப்பாவி சிறு, குறு விவசாயிகள் நிலத்திலே விளையும் முண்டு வற்றலைப் பறித்து களங்களிலும், ஆற்றுப் படுகைகளிலும் அதை உலர வைத்து, அதன்பிறகு அதன் தரம் குறையாமல் பாதுகாப்பதற்கு எந்தக் குளிர்பதனக் கிடங்கும் எங்கள் விளாத்திகுளம் பகுதியில் இல்லை. ஆகையால் சிறு, குறு விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினையாக அது இருப்பதால் விளாத்திகுளத்தில் குளிர்பதனக் கிடங்கு அமைத்திடத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் இல்லை என்று நான் பதிலளித்தேன். இருப்பினும், தனியார் அல்லது விவசாயக் குழுக்கள் யாரேனும் குளிர்பதனக் கிடங்கு அமைக்க முன்வந்தால், மத்திய அரசாங்கத்தினுடைய 25 சதவீத மானியத்தைப் பெற்றுத் தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முன்வந்தாலும்கூட இந்தச் சலுகையைப் பெற்று குளிர்பதனக் கிடங்கு அமைத்துக்கொள்ளலாம். மேலும், விளாத்திகுளம் தொகுதியில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வருங்காலத்தில், சாத்தியக்கூறுகள்

2010 ஏப்ரல் 23]

இருக்கின்றனவா என்று ஆராய்ந்து முடிவு எடுக்கலாம் என்று அரசு கருதுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டத்தில் 2009–2010 ஆம் ஆண்டில் 8,925 ஏக்கர் பரப்பளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு ரூபாய் 30.34 கோடி மதிப்புள்ள 7,584 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மிளகாயைக் காய வைத்துவிட்டால் அதற்குப் பின்னாலே குளிர்பதனக் கிடங்குகளில் வைக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஒருவேளை பறித்தவுடன் சீதோஷ்ண நிலை சரியில்லாமல் இருக்குமானால் அந்த நேரத்திலே பயன்படுத்த அது உதவலாம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் சொன்ன அந்தப் பதிலின் அடிப்படையில் விளாத்திகுளத்திலே குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு பரிசீலனை செய்து, ஒரு முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய வைத்த மிளகாய் வற்றல் மூன்று மாத காலத்திற்குத்தான் அது அந்தத் தரத்தோடு இருக்கும். அதன் பிறகு அந்தத் தன்மை குறைந்துவிடும். எங்கள் வானம் பார்த்த கரிசல் பூமியிலே விளைந்த முண்டு மிளகாய் வற்றலை 70 கிலோ மீட்டருக்கு அதிகமான தூரத்தில் உள்ள தூத்துக்குடிக்கு தனியார் குளிர்பதனக் கிடங்குகளுக்குத்தான் எங்கள் அப்பாவி விவசாயிகள் வாடகை வண்டிகளில் அதிகமாகக் கட்டணம் கொடுத்து recommendation–க்கு ஆட்களையும் பிடித்துத்தான் அதிகம் செலவழித்து, நல்ல விலை வரும் வரை தரம் குறையாமல் பாதுகாத்து வைக்கவேண்டிய சூழ்நிலை உள்ளது. சில சமயம் factory–யில் அப்பாவி விவசாயிகள் வற்றலைக் கொண்டு செல்லும்போது காவல் துறையினர் வேறு பிடித்துவிடுகிறார்கள். ஏதோ களவுப் பொருட்களைக் கொண்டு செல்வதுபோல்தான் பயந்து நடுங்கிக்கொண்டே கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், விளாத்திகுளத்தில் ஒரு வேளாண்மை விற்பனைக் கூட வளாகம் இருக்கிறது, அந்த வளாகத்திலேயே தாராளமாக இட வசதி உள்ளது. அங்கேயே குளிர்பதனக் கிடங்கு அமைத்திட மீண்டும் அமைச்சர் அவர்களை தங்கள்மூலம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 9–35

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளத்தில் வேளாண்மை விற்பனைக் கூடம் இருக்குமானால்—அங்கே இட வசதி ஏற்கெனவே இருக்கிறது—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதைப்போல அந்த வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மிளகாய் வைத்துக்கொள்ள, கட்டணம் இல்லாமல் அவர்களுக்கு சலுகை அளித்து வைத்துக்கொள்ளுங்கள் என்று அரசு உத்தரவிடும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

83—

அலுவலகம்

***52279—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பகுதி அலுவலகம் துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.